**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| CC.No. | : | 20/2024 |
| Deposition of Witness for | : | PW1 |
| Name and Age | : | திரு.ராஜிவ்காந்தி (வயது 37) |
| Father / Husband Name | : | முருகன் |
| Occupation | : | டிரைவர் |
| Village | : | செங்கன் பஸ்வன்தலாவ் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 24.02.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A3 present. A1, A2 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**அ.சா. 1**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் செங்கன்பஸ்வன்தலாவ் கிராமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், மற்றும் எதிரிகள் கோவிந்தராஜ் மற்றும் ஆறுமுகத்தையும் தெரியும். எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் பூர்விக சொத்த சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. கடந்த 20.09.2023–ம் தேதி காலை 11.00 மணியளவில் தின்னகுட்லானஅள்ளி விநாயாகர் சதுர்த்தி அன்று விநாயகர் கோவில் அருகில் இருந்தேன். அப்போது என்னுடைய தந்தை எனக்கு போன் செய்து தன்னுடைய நிலத்தில் உழவு செய்துக்கொண்டிருந்தபோது எதிரிகள் கோவிந்தராஜ், ஆறுமுகம் ஆகியோர்கள் உழவு ஓட்டக்கூடாது என்னை அடித்ததாக கூறினாா். உடனே நான் சம்பவ இடம்சென்று சண்டையை விலக்க முயற்ச்சி செய்தபோது கோவிந்தராஜ், ஆறுமுகம் இருவரும் எனது தந்தையை மீண்டும் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். நான் எனது தந்தை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றபோது பின்னால் வந்த ஆறுமுகம் கட்டையால் எனது பின் தலையில் அடித்துவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். கீழே விழுந்த என்னை எனது தந்தை தூக்க முயற்சித்தபோது எதிரி ஜெயா அறுவாளால் எனது தந்தையின் முன்தலையில் வெட்டிவிட்டார். பின்னர் என்னை கோவிந்தராஜ், ஆறுமுகமும்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.24 17:41:13 +0530

பிடித்துக்கொண்டார்கள், ஆஜர் எதிரி ஜெயா, என்னை இடது கை மணிக்கட்டு பகுதியில் அருவாளால் வெட்டிவிட்டார். அப்போது அங்கிருந்த நரசிம்மன், ராஜேந்திரன் ஆகியோர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். பின்னர் ஊரில் இருந்த பவுன்ராஜ் என்பவருக்கும் தகவல் தெரிவித்து அவர் என்னை ஒரு இருசக்கர வாகனத்திலும், என் தந்தை முருகனை கோவிந்தராஜ் என்பவர் மற்றொரு இருசக்கர வாகனத்திலும் மாரண்டஅள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைகாக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும், எனது அப்பாவும் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சுமார் 5 நாள்கள் சிகிச்சையில் இருந்தோம். நான் சிகிச்சையில் இருந்தபோது மகேந்திரமங்கலம்போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 4 கிலோ மீட்டர் இருக்கும். சம்பவ இடம் எனக்கு பூர்விக சொத்து என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் இடம் எதிரிகளுக்கு சொந்தமான சொத்து என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு சொந்தமான நிலத்தில் டிராக்டர் மூலம் உழவு செய்து சொத்தை சேதப்படுத்தினோம் என்றால் சரியல்ல. என்னை கேள்வி கேட்டதால் நானும் எனது தந்தையும் எதிரிகளை தாக்கினோம் என்றால் சரியல்ல. எனது தந்தை என்னுடைய வசிக்கிறார் என்றால் சரிதான். நீதிமன்றம் மூலம் பாகபிரிவினை செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும், சொத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்ததால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் ஆஜர் எதிரி, அவரது மகளையும் தாக்கிவிட்டு வழக்கில் பொய்யாக புகாரைக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கோவிந்தராஜியை நான் தாக்கியதாக புகார்கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு எப்பொழுது மருத்துவமனைக்கு சொன்றேன் என்றால் சுமார் 12.00 மணிக்கு சென்றேன். போலிசார் என்னை மாலை 06.00 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.24 17:41:18 +0530

போலிசார் விசாரணை வாக்குமூலத்திற்கு வேறுப்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.24 17:41:23 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| CC.No. | : | 20/2024 |
| Deposition of Witness for | : | PW2 |
| Name and Age | : | திரு.முருகன் (வயது 72) |
| Father / Husband Name | : | வெங்கடசாமி |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | செங்கன் பஸ்வன்தலாவ் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 24.02.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**அ.சா. 2**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் செங்கன் பஸ்வன்தலாவ் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் பார்த்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரிகள் கோவிந்தராஜ் எனது அண்ணன். ஆறுமுகம் எனது அண்ணன் மகன் ஆவார். எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 20.09.2023–ம் தேதி பகல் சுமார் 11.00 மணியளவில் எனது நிலத்தில் உழவு செய்துக்கொண்டிருந்தபோது என்னுடைய அண்ணனும், அவரது மகனும் உழவு ஓட்டக்கூடாது என்று சொல்லி என்னை அடித்துவிட்டார்கள், நான் உடனே போன் மூலம் எனது மகன் ராஜிவ்காந்திக்கு தகவல் சொன்னேன். அவர் விநாயகர் சதுர்த்தி நிகழ்ச்சியிலிருந்து சம்பவ இடத்திற்கு உடனே வந்தார். சம்பவ இடத்திற்கு வந்து ஏன் எனது தந்தையை அடித்தீர்கள் என எதிரிகளை பார்த்து கேட்டார். அப்போது கோவிந்தராஜவும், ஆறுமுகமும் எனது மகனை கட்டையால் பின்தலையில் அடித்துவிட்டார்கள். பின்னார் கோவிந்தராஜியும், ஆறுமுகமும் எனது மகனை கீழே அமுக்கி பிடித்துக்கொள்ள ஆஜர் எதிரி ஜெயா அருவாளால் இடது கை மணிகட்டு பகுதியில் ஒரு வெட்டும், தலையில் ஒரு வெட்டும் வெட்டிவிட்டார். பின்னர் என்னுடைய முன்பக்க நெற்றியில் ஜெயா அருவாளால் வெட்டிவிட்டார். பின்னர்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.24 17:41:28 +0530

ஊரில் இருந்த வந்த கோவிந்தராஜ் மற்றும் பவுன் ராஜ் ஆகியோர்கள் என்னையும், எனது மகனையும் மாரண்டஅள்ளி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிசிச்சை செய்து, மேல் சிகிச்சைக்காக பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சுமார் 03 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் எனக்கு உரிமையானது என்பது பற்றி ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். சம்பவம் இடம் எதிரிகளுக்கு சொந்தமானது என்றால் அது பொது சொத்தாகும். சம்பவ இடத்திற்கு நான் இருசக்கரவாகனத்தில் சென்றேன். அ.சா.1 சொல்லவே நான் டிராக்டரை அழைத்து சென்று உழவு செய்தேன். எதிரியின் சொத்தில் உள்ள பயிர்களை நாசம் செய்தேன் என்றால் சரியல்ல. அது எங்கள் நிலம் ஆகும். எதிரிகள் நிலத்தை சேதப்படுத்தினோம் என்றாலும், எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து விடுவார்களே என்று பயந்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை தாக்க வில்லை என்றாலும், எதிரிகளுக்கும் வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. மருத்துவமனைக்கு சுமார் 12.00 மணியளவில் சென்றோம். சம்பவத்திற்கு பிறகு போலிசார் என்னை எத்தனை மணிக்கு வந்து விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினமே இரவு 09.00 மணிக்கு விசாரித்தார்கள். போலிசார் விசாரணையிலும், நீதிமன்றத்திலும் வேறுப்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.24 17:41:33 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| CC.No. | : | 20/2024 |
| Deposition of Witness for | : | PW3 |
| Name and Age | : | திரு.பவுன்ராஜ் (வயது 28 ) |
| Father / Husband Name | : | கோவிந்தன் |
| Occupation | : | சீப்ஸ் கடை வைத்துள்ளேன். |
| Village | : | தின்னகுட்லஅள்ளி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 24.02.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**அ.சா.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தின்னகுட்லஅள்ளி கிராமத்தில் குடியிருந்து சீப்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை தெரியும், எதிரிகள் ஜெயா, கோவிந்தராஜ், ஆறுமுகம் ஆகியோர்களையும் தெரியும். கடந்த 20.09.2023–ம் தேதி காலையில் விநாயகர் சதுர்த்திவிழாவில் இருந்தேன். என்னுடன் அ.சா.1–ம் இருந்தார். பின்னர் 10.00 to 11.00 மணியளவில் அ.சா.1 தன்னை சித்தப்பா, அவரது மகன், மற்றும் சித்தி ஆகியோர்கள் அடித்துவிட்டதாக கூறி தன்னை அழைத்தார். பின்னர் சம்பவ இடம் சென்று பார்த்தப்போது அவருக்கு இடது கையில் ஒரு வெட்டு காயமும், தலையில் ஒரு வெட்டு காயமும் இருந்தது. அவரது தந்தைக்கு தலையில் ஒரு வெட்டு காயம் இருந்தது. பின்னர் காயம் பட்ட ராஜிவ்காந்தியை நானும், ராஜிவ்காந்தியின் தந்தையை எனது அப்பா கோவிந்தராஜியும் இருசக்கர வாகனத்தில் மாரண்டஅள்ளி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்த்தோம். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது உறவினர் என்றால் எங்களது ஊரைச்சேர்ந்தவர் ஆவார் மேலும்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.24 17:41:39 +0530

பழக்கமானவர் ஆவார். சம்பவ பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு பழக்கமானவர் என்பதால் அவருக்கு ஆதவராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளும் எனக்கு தெரிந்தவர்கள் தான். போலிசார் 20.09.2023–ம் தேதி சுமார் 05.00 மணிக்கு விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.24 17:41:44 +0530

Judicial Magistrate,
Palacode.